# அக நானூற்றில் உமணர்கள் - பயணங்கள், பாதைகள், பதிவுகள்

முனைவர் ச. பாரதி பிரகாஷ்,

உதவிப் பேராசிரியர்,

தமிழ்த்துறை,

பி.எஸ்.ஜி கலை அறிவியல் கல்லூரி,கோயமுத்தூர்.

**திறவுச்சொற்கள்**

எட்டுத்தொகை, அகநானூறு, உமணர்கள் , உப்பு,பயணம், பாதை , பண்டமாற்று , பயணப் பதிவுகள்.

**முன்னுரை**

மனிதவாழ்வில், பயணம்தவிர்க்க இயலாததாகும். பயணங்களால்பிற பகுதியின் புவியியல் அமைப்பைப் பற்றியும் பிறபகுதி மக்களின் பழக்கவழக்கங்கள் , பண்பாடு , நாகரிகம் பற்றியும் அறிந்து கொள்ள முடிகிறது. மக்கள் மேற்கொள்ளும் பயணங்களில் வணிகப் பயணம் தனித்த இடம் பெறுவதோடு அவர்களின் வாழ்வியலில் சமூக, பொருளாதார , அரசியல் மாற்றங்களை உண்டாக்கும் காரணிகளில் முதன்மையானதாக வும் உள்ளது. எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான அகநானூற்றில் பல்வேறு வணிகம் சார்ந்த பயணக்குறிப்புகள் இடம் பெற்றுள்ள ன. அதில் குறிப்பிடத் தக்கவர்கள் உப்பு வணிகம் செய்த உமணர்கள் ஆவர்.இவர்கள், ஊர்ஊராகச்சென்று உப்பைப்பண்ட மாற்று முறையில் விற்பனை செய்துள்ளனர். மேற்கண்ட உமணர்குடிகளின் பயண நிகழ்வு களில் இடம் பெற்றுள்ள பயணங்கள் பாதைகள் பதிவு களை அடிக்கோடிட்டுக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வணிக வழிகள்**

சங்ககாலத்தில், தமிழகத்திலிருந்து வணிகம் செய் வதற்காக வடநாடு செல்பவர்கள் , வெய்யூர் (இன்றைய வேலூர்) வழியாக அல்லது தகடூர் (இன்றைய தர்மபுரி) வழியாக வடநாடு சென்றனர். மேற்கண்ட பாதையைப் போலவே, ஆந்தி ரா, கலிங்க நாடு வழியாக வடநாடு செல்லும் பாதை யும் இருந்துள்ளது. மாமூலனார் தனது அகநானூற்றுப் பாடல்களில்(295, 311, 359) வடநாடு செல்வதற்கான வழிகளைப் பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ளது. இது வேங்கடமலையை (இன்றைய திருப்பதி)க் கடந்து செல்லும் பாதையாகக் குறி ப்பிடப் பட்டுள்ளது. இவ்வழியில் செல்பவர்கள் கலிங்க நாட்டுக்கு வணிகம் செய்யச் சென்றவர்களாக இருந்திருக்கக் கூடும்.

ஒரு நாட்டின் வளர்ச்சி நிலையி ல் ஒன்றாக அந் த நாட்டின் உள்நாட்டு ,வெளிநாட்டு வணி கம் இடம் பெறுகின்றன . இவை வணி கப்பொருள், வணிகப்பாதை, பண்டங்களைச் சுமந்து செல்லப் பயன்படுத்திய வாகனங்கள், கால்நடைகள், நாணய முறை, அளவை முறை, வாணிபம் செய்வோர் என விரிவான பல செய்திகளை உள்ளடக்கி யதாகும். ( https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungal-noolagam-aug23/45671-2023-09-01-04-34-31 இணைப்பின் சுருக்கச் செய்தி ) என்ற கருத்தும் இங்கு ஒப்பிடத்தக்கது.

**வணிகப்பாதைகள், பதிவுகள்**

நாடோடி வாழ்க்கையை முதல் நிலைத்த விவசாய வாழ்க்கைக்கு வந்தது வரையிலான மனிதனின் வாழ்க்கை பயணத்தை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளது. உலக



© 2024, IRJTSR

இலக்கியங்கள் அனைத்திலும் பயணங்கள் முக்கிய இடம் பெற்றுள்ளன. செவ்வியல் இலக்கியங்களிலும் பயணம் என்பது ஒரு முக்கியக் கூறாக உள்ளது. மேற்கண்ட கருத்துக்களின் அடிப்படையில் உமணர்களின் பயணப்பாதைகள் , பயணவாகனங்கள் ஆகிய இரண்டும் சங்க இலக்கியங்களில் தவிர்க்க இயலாத இடம் பெற்றுள்ளன. பயணங்கள் வெற்றி பெறவும், தோல்வியுறவும் பயணப் பாதைகளே காரணமாக அமைந்துள்ளன. வரலாற்றுக் காலத்திலிருந்து பயணவழிகளைக் கண்டடைவதன் மூலமே நாகரிகம் பரவத் துவங்கியது. புதிய வழித்தடங்களைக் கண்டடைவதும் வாழிடங்களைக் கண்டடைவதும் நாடோடி வாழ்க்கை மேற்கொண்ட மக்களுக்கு சாதனைகளாக அமைந்தன. ***வீடு வாசலின்றி இங்குமங்கும் திரிந்து கொண்டிருந்த கூட்டத்தார்கள் , தங்கள் கால்நடைகளுக்காக மேய்ச்சல் தரையைத் தேடிச்சென்ற பொழுதும் , இவர்களுக்கு முன்னரே வேட்டையைத் தேடிச்சென்று பொழுதும் , இவர்களுக்கு முன்னரே வேட்டையைத் தேடிச்சென்ற வேடுவர்கள் காரணமாகவும் , முதலில் சிறிய பாதைகள் தோன்றி , அவைகளே பிற்காலத்தில் ராஜபாட்டைகளாக மாறின. இவ்வாறு பல ஆண்டுகள் வழிகளைத் தேடிச் சென்றதன் காரணமாக பலப்பல சாலைகள் தோன்றி இறுதியில் வலைவிரித்தாற்போல் நம் நாட்டில் சாலைகள் பரவியுள்ளன.***(மோதி சந்திரா , இந்திய வணிக நெறிகள் , ப. 47) என்ற கருத்தும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் பெருவழி என்ற பயணப்பாதைகள் இன்றைய நவீன உலகின் தேசிய நெடுஞ்சாலைகளுடன் ( National Highways) ஒப்பு நோக்கத் தக்கவை ஆகும். இச் சாலைகளில் தொடர்ச்சியாகப் பயணம் மேற்கொண்டவர்கள் உமணர்கள் ஆவர். உப்பு வணிகத்திற்காக இவர்கள் பயணம் மேற்கொண்டாலும் நெய்தல் நிலத்தையும் குறிஞ்சி நிலத்தையும் இணைக்கும் காலத்தின் தூதுவர்களாக விளங்கினர் என்பதை மறுக்க இயலாது. அக நானூற்றில் இடம் பெற்றுள்ள குறிப்புகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

**பண்டமாற்று**

பண்டமாற்று என்பது ஒரு பொருளைக் கொடுத்து அதற்கு ஈடாக மற்றொரு பொருளை ப் பெற்றுக் கொள்வது ஆகும். பணத்தைப் பயன்படுத்தாமல் பொருட்களின் பரிமாற்றம் மூலம் நேரடியாக நிகழும் வணிகமுறையே பண்டமாற்று முறையாகும். சங்க கால ம் முதல் உழைப்பிற்கான ஊதியம் பண்டமாற்று வடிவில் தானியங்களாக, உணவுப் பொருட்களாக வழங்கப்பட்டது. சங்க கால மக்கள் அன்றாடத் தேவைக்கு உரிய உணவுப் பொருட்களான அரிசி, பருப்பு, உப்பு,பால், தயிர், மீன், இறைச்சி முதலான பொருள்களை ப் பணம் கொடுத்து வாங்காமல் பண்டமாற்று செய்து கொண்டார்கள் என்பதையும்அதிக விலையுள்ள பொருள்களை மட்டும் பணம் கொடுத்து வாங்கினார்கள் என்பதையும் இலக்கியச் சான்றுகளின் வழியாக அறிகிறோம்.

இடையன் பாலைக் கொடுத்து அதற்கு ஈடாகத் தானியத்தை மாற்றிக் கொண்ட நிகழ்வை, 'பாலொடு வந்து கூழொடு பெயரும் பாடுடை இடையன் ' என்று (குறு.221. 3-4) குறுந்தொகை குறிப்பிடுகிறது. வேடர்கள் ஒன் றாகச் சேர்ந்து காட்டில் வேட்டையாடிக் கொன்ற யானையின் தந்தங்களை மதுபானக் கடையில் கொண்டுபோய்க் கொடுத்து மது அருந்தி ய நிகழ்வை , அண்ணல் யானை வெண்கோடு கொண்டு நறவு நொடை நெல்லின் நாண்மகிழ் அயரும் '(அகம், 61:8-10) என்ற அக நானூற்றுப் பாடல் விவரிக்கிறது. கடலில்கிடைக்கும் உணவுப் பொருளான மீன் பண்டமாற் று முறையில் உப்பைப் போல நெல்லுக்கு இணையான மதிப்பைக் கொண்டிருக்காமல் கூடுதல் மதிப்பைப் பெற்றிருந்து. இதனை, ‘சில மீன் சொறிந்து பலநெல் பெறூஉம்’ என்ற ஐங்குறுநூற்று பாடல் அடியால் (49:2) அறிய முடிகிறது.

இவ்வாறு வெவ்வேறு நிலம் சார்ந்த மக்கள் தங்களுக்குக் கிடைக்கக் கூடிய பொருட்களைப் பிற பகுதியில் கிடைக்கும் பொருட்களோடு பண்ட மாற்று செய்யும் முறை சங்க காலத்தில் பொது வழக்கமாக இருந்தது.


© 2024, IRJTSR

**உமணர்கள்**

சங்ககாலத்தில் பல்வேறு குடிகள் / இனக்குழுச்சமூகங்கள் தமிழகத்தில் வாழ்ந்துவந்தனர். இவர்கள்குறவர், பாணர் , கடம்பர் , ஆயர், உழவர், எயினர், பரதவர் எனப் ப ல்வேறு (பூர்வ குடி/ இனக்குழு) பெயர்களால் அழைக்கப் பட்டனர். இவர்கள் ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியினை சார்ந்தோ அல்லது அந் நிலப்பகுதியில் குடியேறி யோ வாழ்ந்த குடிமக்கள் ஆவர். இவை அனைத்திற்கும் மாற்றாக முழுமையான நாடோடி வாழ்க்கை முறையை யில் இருந்த உமணர்கள் எனும் குடி களும் உள்ளனர். இவர்கள் பரதவர்விளைவித்தஉப்பைவாங்கி ச் சென்று மாட்டுவண்டியில் ஊர்ஊராக விற்பனை செய்தவர்கள் என்பதை இலக்கியச் சான்றுகளின் வழியே அறியலாம். நெல்லைப் பெற்று கொண்டு அதற்கு பதிலாக உப்பை விற்பனை செய்பவர்களாக உமணர்குடிகள் இருந்துள்ளனர். இதனால், உமணர்குடிகள் இருந்தஊர்கள் அனைத்தும் மிகுந்த ஆரவாரம்மிக்கதாக இருந்துள்ளது. சங்க இலக்கியத்தில் பல்வேறு பாடல்களில் உமணர்கள் பற்றியகுறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

**உப்புவிளையும் கழனி**

சங்ககால மக்கள்உப்பு உற்பத்தி செய்யும் முறையை நன்கு அறிந்திருந்தனர். நெய்தல் நிலப்பகுதியில் பாத்திகள் அமைத்து உப்பை விளைவித்துள்ள தை சங்க இலக்கியம் மூலம் அறியலாம். உப்பு உற்பத்தியாகும் இடத்தை குறுந்தொகை ‘உப்புவிளை கழனி’ என்று குறிப்பிடுகிறது . இதனை, யாயும்உப்பை மாறி வெண்ணெல் தரீஇயஉப்புவிளை கழனிச் சென்றனள் என்ற பாடல் அடிக ளின் மூலம் நன்குஅறியலாம். (குறுந்தொகை269). உமணர்கள், உமணசாத்து என்று குறிப்பி டப்படுவதால் இவர்கள் வணிகக் குழுவாக இயங்கினர் என்பதை அறிய முடிகிறது.

உழவுத்தொழில் செய்து நிலத்தை விளைவிப்பது போல , நெய்தல் நில மக்களான பரதவர்கள் கடல் என்ற நிலத்திலே உப்பை விளைவித்தனர் என்ற செய்தியை நற்றிணை , “நேர் கண் சிறுதடி நீரின் மாற்றிவானம் வேண்டா உழவின் எம்” (நற்.254) என்று குறிப்பிடுகிறது.பரதவர்கள் மழை நீரை எதிர்பாராது கடல் நீரைக் கொண்டு உப்பை விளைவிப்பார்கள் என்கிறார் சங்கப் புலவர். உப்பையும் மீனையும், ஊர்ஊராகச் சென்று விற்பனை செய்த நிகழ்வை அகநானூறு (140) விளக்குகிறது.

**உமணர்களின் உப்பு வண்டி**

உப்பு விற்கச் செல்லும் உமணர் வண்டியில் பல எருதுகளைப் பூட்டி ஓட்டிச்செல் லும் வழக்கம் உடையவர் ஆவர். உப்புவண்டிகள் பல ஒன்றோடு ஒன்றாக ச் சேர்த்துகட்டப் பட்டிருக்கும். இதற்கு ‘ஒழுகை’ என்று பெயர். இவ்வாறாக வெவ்வேறு இடங்களுக்கு உமணர் உப்பு விற்பனைக்கு செல்வர் என்பதனை,

உப்பு ஒய் உமணர் அருந் துறைபோக்கும்
ஒழுகை நோன் பகடு ஒப்பக் குழீஇ,
அயிர் திணி அடைகரை ஒலிப்ப வாங்கி,
பெருங் களம் தொகுத்த உழவர் போல,
இரந்தோர் வறுங் கலம் மல்க வீசி,
பாடு பல அமைத்து, கொள்ளை சாற்றி ( அக. 30) பாடல் மூலம் அறியலாம்.

மேற்கண்ட செய்திக்கு இணையான மற்றுமொரு அக நானூற்றுப் பாடற் காட்சியில் உப்பு வணிகர்கள் பல புரிகளையுடைய நீண்ட கயிற்றினால் எருதுகளின் கழுத்தில் கட்டி அதனைக் கொண்டு வண்டியைப் பூட்டுவார்கள். உயரமான இடங்களை நோக்கி வண்டியை ஓட்டும்போது உமணர்கள் எருதுகளை அதட்டி , விரட்டி ஓட்டுவார்கள். அப்போது ஓசை எழுப்பி அதன் மூலம் வண்டியை விரைவாகச் செலுத்துவார்கள் என்னும் குறிப்பு காணப்படுகிறது. இதனை,

பகடு துறை ஏற்றத்து உமண்விளி வெரீஇ
உழைமான் அம்பிணை இனன் இரிந்து ஓட” (அகம்.173) என்ற பாடல் அடிகள் விவரிக்கின்றன.

இன்றும் மாட்டு வண்டிகளை ஓட்டுவோர் இது போன்ற சத்தத்தை எழுப்பி வண்டியை ஓட்டுவதைக் காணலாம். இதற்கு இணையானமற்றொரு பாடல் காட்சியை நற்றிணையில் காணலாம். இப்பாடலில் உமணர்கள் உப்பின் விலையைக் கூறி விற்பதை,

"……………………….. உமணர்
வெண் கல் உப்பின் கொள்ளை சாற்றி
கண நிரை கிளர்க்கும் நெடு நெறிச் சகடம்
மணல் மடுத்து உரறும் ஓசை கழனிக்" (நற்.4)

என்னும் அடிகளில் மூலம்நன்கு அறியலாம். 'உப்பு வணிகர்கள் வெண்மையான கல்லுப்பின் விலையைக் கூறிக் ஒலியெடுப்பியப் படிசெல்வார்கள். அவ்வாறு செல்லும் போது வண்டியின் சக்கரத்தில் கட்டியிருக்கும் மணியின் சத்தம் கேட்டு அருகில் உள்ள நீர் நிலையில் வசிக்கும் கருங்கால் வெண்குருகுகள் அச்சப் படும் என்ற செய்தி சுவையுடையாக அமைகிறது.

உமணர்கள் உப்பை மாட்டுவண்டியில் ஏற்றிக் கொண்டு புழுதி படிந்தவழியில் வரிசையாகவும் கூட்டமாகவும் சென்றுள்ளனர் என்பதை,

உவர் விளை உப்பின் கொள்ளை சாற்றி,
அதர் படு பூழிய சேண் புலம் படரும்
ததர் கோல் உமணர் பதி போகு நெடு நெறிக்
கண நிரை வாழ்க்கைதான் நன்று கொல்லோ ? (அக.390) என்ற பாடல் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

**உமணரும் வீளையும்**

பாதிரிப் பூ தூய வெள்ளை நிறத்தி லும் அலரி தீ எரிவது போன்ற நிறத்தி லும் பூத்திருக்கும். இரண்டு பூக்களையும் மாறி மாறி இடையில் வைத்து மாலையாக, கண்ணியாகக் கட்டி அணிந்து கொண்டு உமணர் உப்பு விற்கச் செல்வர். அவர்கள் காலில் தோலால் தைக்கப்பட்ட செருப்பு அணிந்திருப்பர். கையில் தடி வைத்திருப்பர். அந்தத் தடியால் உப்புவண்டிச் சக்கரத்தைத் தூக்கிவிடுவர். இந்தத் தடியானது வண்டி இழுக்கும் எருதுக்கு உதவியாக இருக்கும். எருதின் கழுத்தில் மணி ஒலிக்கும். எருதினை விரைந்து செலுத்த வாயில் ஊதல்-ஒலி (வீளை) எழுப்புவர் என்பதை,

அத்தப் பாதிரித் துய்த் தலைப் புது வீ
எரி இதழ் அலரியொடு இடை பட விரைஇ,
வண் தோட்டுத் தொடுத்த வண்டு படு கண்ணி,
தோல் புதை சிரற்று அடி, கோலுடை உமணர்
ஊர் கண்டன்ன ஆரம் வாங்கி,
அருஞ் சுரம் இவர்ந்த அசைவு இல் நோன் தாள்
திருந்து பகட்டு இயம்பும் கொடு மணி, புரிந்து அவர்
மடி விடு வீளையொடு, ( அக. 191) என்ற பாடல் அடிகளால் நன்கு அறியலாம்.

**கழுதையில் ஏற்றி உப்பை விற்றல்**

உமணர்கள் எருது வண்டிகள் இல்லாத சூழ்நிலையில் கழுதைகளின் முதுகில் வைத்து உப்பை விற்று வந்தனர் என்பதை,

"நிரைப்பரப் பொறைய நரைப்புறக் கழுதைக்
குறைக்குளம்பு உதைத்து கல்விறழ் இயவின்" (அகம்.207)

என்னும் அடிகளி ன், மூலம் நன்கு அறியலாம்.வெண்ணிற உப்பினை உமணர்கள் மூட்டைகளாகக் கட்டி , வெண்ணிற கழுத்தினைக் கொண்ட கழுதைகளின் முதுகிலே வைப்பர். மேற்கு

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR 

திசையில் உள்ள இடங்களுக்குக் கொண்டு சென்று அதிக விலைகூறி விற்பார்களாம் என அகநானூறு பாடல் தெரிவிக்கின்றது.

**முடிவுரை**

அகநானூற்றில்பல்வேறு வணிகம் சார்ந்த பயணக் குறிப்புகள் இடம் பெற்றுள்ள ன.அவற்றில் குறிப்பிடத் தக்கவர் களாக விளங்குபவர்கள் உப்பு வணிகம் செய்த உமணர்கள் ஆவர் . இவர்கள் , ஊர்ஊராகச் சென்று உப்பைப் பண்ட மாற்று முறையில் விற்பனை செய்துள்ளனர். அவ்வாறு செல்லும் போது ஏற்பட்ட பயண அனுபவமும், பயன வழி பற்றிய பதிவுகளும், அது சார்ந்த இன்னல்களும் மேலும் விரிவான ஆய்வுக்கு உரியன. மேற்கண்ட உமணர்குடிகளின் பயண நிகழ்வு களில் இடம் பெற்றுள்ள பயணங்கள் பாதைகள் பதிவு களை அடிக்கோடிட்டுக் காட்டுவதாக மேற்கண்ட இக்கட்டுரை அமைந்துள்ளது.

**துணைநூற்பட்டியல்**

[1] கிருட்டிணசாமி,வெ.(2003), தமிழ் இலக்கியத்தில் பயணச் செய்திகள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

[2] ஞானபுஷ்பம், இரா. (1990), தமிழில்பயண இலக்கியம், ஐந்திணைப்பதிப்பகம், சென்னை.

[3] சுப்பிரமணியன்,ச.வே.(ப),(2010), சங்க இலக்கியம் (மூலமும் தெளிவுரையும்), மணிவாசகர் வெளியீடு, சென்னை.

[4] சுப்பிரமணியன் , எம்., (மொ), இந்திய வணிக நெறிகள், சாகித்ய அகதமி, தில்லி.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR 